உ

மார்க்கண்டேயர்

எமனைக்கண்டுபுலம்பலும்பூசையும்

மருத்துவதியம்மன் புலம்பலும்

அடங்கி யிருக்கின்றன.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என் சி.

கடவுள் துணை.

மார்க்கண்டேயர் எமனைக்கண்டு புலம்பலும்-பூசையும்.

—(*)—

விநாயகர் துதி-விருத்தம்.

சீரான திருக்கடையூமிரர்தலிங்க நாதரதுசெயலை வாழ்த்தி, பேறுனசெந்தமிழால் மார்க்கண்டநாடகத்தின்பெருமைகூர, தீராதவினையெவையும் தீர்க்குமபிராமிமுதற் செல்வனை, காரானைமாமுகத்தோன்கருணைமிகுகமலபதம் காப்புத்தானே.

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

கையில்மான்மழுவுமேந்துங் கடவுளே கடையூர்வாழும்
தையலையிடத்தில்வைத்த தற்பராஎன்னசெய்வேன்
துய்யமாங்கதையுஞ்சூல பாசங்கொண்டென்னைக்கண்டு
மைனாகபர்வதம்போல் மறலியும்வாரானையோ

மார்க்கண்டேயர் தாயார்-புலம்பல்

அப்பாமார்க்கண்டா என் கண்மணியேஅடா
ஒப்பிலாதவத்திலுல் உதித்த சங்கனியே-ஒ
உன்னைப்பிரிந்திருப்பேனே தனியேமகனே
அடாதனியே சுதனே அடா (அ)

அப்பாமகனேயுன்னைப்பிரிந்து என்ஆவிதரித்திடுமோ
ஐயனேயென்னுள்ளம்நையுதே-அப்பாவுன்னையும்

கோலமாங் கலியாணஞ்செய்து கண்ணாலேபார்க்கிலேயே
யடா-கொற்றவா வயிற்பற்றுதே மிகக்கற்றவர்-கொடும்
பாவியான் பெற்றகடனைத்தீர்க்கிலேயோ.   (அ)

சாலவுந்தவத்தால் வந்துதித்த கோலமாங்குமராசற்குண
உன்னைப்பிரிந்து எப்படிஉயிர்தரித்திருப்பேன்.   (அ)

மார்க்கண்டேயர்சொல்லுதல் தங்கமெட்டு.

நான்சிவபூசைசெய்து எமனைவிலக்கிக்கொண்டு போகும்
வழி தேடிக்கொள்வேன் என்னம்மணி புலம்பியழுகா
தே, அல்லும்பகலும்நான் அரனைப்பூசைசெய்து வல்வி
னைத் தீர்த்துக்கொள்வேன், என்னம்மணி புலம்பி அழு
காதே.

புலம்பல்-தரு-இ-ம்-வராளி-அடதாளம்.

கண்ணிகள்.

கடையூர்தனிலேகாலனென்மேலே கடுகியேவாரானே
அவனைக்கண்டவுடனே கலங்குதேஎன்மனங்
காருங்கங்காதரனே
படையுடனேவாரான் சடசடெனநேராய்-என்
சடலமெல்லாம் படபடென்ன
கடவுளேநானென்னசெய்வேன்   (கடை)

இந்தஎமன்வதையைத்தீர்க்க இதுசமயமையா-அவன்
இரைந்துகொண்டென்றன் மீதினில்வாரா
னென்றுயிர் தீரும்ஐயா

மைந்தனெனைக்கண்டு தண்டுகையிற்கொண்டு
கொண்டலைப்போல கர்ச்சித்து
சண்டனெதிராகவாரான் (கடை)

அடடாபயலே விடுவேனோவென்றவ
னக்கிரமத்துடனே அவன்
அதட்டிக்கொண்டென்றன் மீதினில்வாரா
னண்டம்வெடித்திடவே
ஐயனேயென்னுள்ளம் நையுதேஎன்செய்வேன்
தையலரைப்பாகம்வைத்த
மெய்யாயெனைக்காக்கவேணும் (கடை)

நம்புமடியார்துன்பம் தீர்க்குநான்மறைப்பொருளே
இந்த-நமனுக்கஞ்சியே வருந்துவேன்றனை
நன்மையாகக் காத்தருளே
அம்புவியோர்நெஞ்சம பதைபதைத்திட
ஆக்கிரமத்துடனே வாரான்
கொக்கரித்துக் கொண்டெதிரே (கடை)

சண்டனெனைக்கண்டு கொண்டுபோவேனென்று
சமர்த்தாய்ப் பேசுகிறான்-வந்த
சண்டனையுதைத்து தொண்டனையாளும்
சாமியமிர்தலிங்கா
சஞ்சலமாகுது சங்கராசம்போ
மிஞ்சிவாராமுன்னம் தஞ்சம்மென்னைக்காரு (கடை)

தரு-இ-ம்-சோகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

காலனிதோ வாரானே கடைக்கண்பார்கடையூரானே
ஆலகாலம்போற்சீறி அதட்டிக்கிடாவிலேறி
சூலங்கையினில்கொண்டு துரத்திவாரானேயின்று
பாலனென்னையேகிட்டிப் பருத்தகண்ணைமிரட்டி.

தரு-இ-ம்-கரகரப்பியா-அடதாளம்.

கண்ணிகள்.

இந்தயேமனென்னுயிரை கொள்வனென்கிறானே
ஈசாகடையூர்வாழ் செகதீசாநானென்னசெய்வேன்
அந்தகன்வாரானிதோ சுவாமியுந்தன்கண்ணாற்பாரா
ஐயாமழுகையாயெனதையா னெனையாளும் [யோ
பார்க்கப்பயமாகுதே எமன்தோர்க்குப்படிஎனக்கு
பாரும்கலிதீரும்வினைதீரும் எந்தனைக்கண்பாரும்
கார்க்கக்கடனுனக்கே கடையூரிலமூர்தலிங்கா
காலனிதோசூலமுடன் ஆலகாலம்போல்வாரான்

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

ஏமனைக்கண்டேபால னிப்படிவருந்தும்போது
காலனையெரித்தளங்கள் கடவுளுமவனைப்பார்த்து
ஏமனையுதைத்தேயுன்னை யின்பமாய்வைப்பேன்பூசை
நேமமாய்ச்செய்வாயென்ன நிமிஷத்திற்செய்குவானே.

பூசை-தரு-திபதை-நீலாம்புரி-அடதாளம்.

காலன்வராமலென்னைக் காப்பாற்றுவாயென்றே
கந்தமலரெடுத்துச் சூடுவேன் சுவாமி
மூலகாரணமான முதலேகடையூரீசா
முல்லைமலரெடுத்துச் சூடுவேன் 1

கன்றிவருங்காலனைக் காலாலுதைத்தேயென்னை
காப்பாயெனவேமலர் சூடுவேன் சுவாமி
என்றுபதினாறுகாவாய் கடையூர்வாழும்
ஈசாமலரெடுத்துச் சூடுவேன் 2

பாலன்றனக்குமுடிவளைத்த பொருளேயுன்னை
பக்ஷமுடன்மலரால் சூடுவேன் சுவாமி
வேலன்தனையளித்த விமலாகடையூரீசா
வெட்சிமலரெடுத்துச் சூடுவேன் 3

பார்வதியைப்பாகத்தில் வைத்தப்பரனேயுன்னை
பாரிசாதமலரால் சூடுவேன் சுவாமி
சீர்கழுங்கடையூர்வாழும் முதலேயுன்னை
செண்பகமலரெடுத்துச் சூடுவேன் 4

கமலாலயன்மால்போற்றுங் கருணைக்கடலேயுன்னை
கதம்பமலரெடுத்துச் சூடுவேன் சுவாமி
விமலாகடையூர்வாழும் வேதப்பொருளேயுன்னை
விதவிதமாய்மலரால் சூடுவேன் 5

இ-ம்-பண்-சாதாரி.

தலையே நீவணங்காய் தலைமாலைதலைக்கணிந்து தலையாலேபலிதேருந் தலைவனைத் தலையேநீவணங்காய், கண்காள் காண்மின்களோ கடனஞ்சுண்ட கண்டன்றன்னையெண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக் கண்காள் காண்மின்களோ, செவிகாள் கேண்மின்களோ-சிவனெம்பிறைசெம்பவள வெரிபோன்மேனிப்பிரான் றிறமெப்போதும் செவிகாள்கேண்மின்களோ, மூக்கேநீமூரலாய்-முதுகாடுறைமுக்கணனை-வாக்கேநோக்கிய மங்கைமணாளனை மூக்கேநீமூரலாய், வாயே வாழ்த்துகண்டாய்மதயானையுரிபோர்த்துப் பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை வாயே வாழ்த்துகண்டாய், நெஞ்சேநீநினையாய்-நீயுன் புன்சடை நின்மலனை, மஞ்சாடுமலை மங்கை மணாளனை நெஞ்சேநீநினையாய், கைகாள் கூப்பித்தொழீர்கடிமாமலர் தூவிநின்று-பைவாய்ப்பரம்பரையாரத்தபரமனை கைகாள்கூப்பித்தொழீர், ஆக்கையாற்பயனென்-அரன்-கோயில்வலம்வந்து-பூக்கையா லட்டிப்போற்றி யென்னுவிதவாக்கையாற்பயனென், கால்களாற்பயனென் கறைகண்ட நுரைகோயில், கோலக்கோபுரக் கோகரணஞ்சூழக் கால்களாற் பயனென், உற்றாராருளரோ உயிர்கொண்டு போம்பொழுது-குற்றாலத்துறை கூத்தனல்லாநமக்குற்றாராருளரோ, இருமாந்திருப்பன்கொலோ ஈசன்பலகணத்தெண்ணப்பட்டு, சிறுமானேந்தி தன்சேவடிகீழ்ச்

சென்றங் கிறுமாங் திருப்பன்கொலோ, தேடிக்கண்டுக் கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித்தே டொணுத்தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டுக்கொ ண்டேன்.

மார்க்கண்டேயர் எமனுக்குச்சொல்-தரு
இ-ம்-கமாஸ்-ஆதிதாளம்.
பல்லவி

ஆரென்றுநினைத்தாயடாவுமா-யெங்க
ளமுர்தகண்டீசரான ஆண்டவரருகிருக்க ஆரெ

அநுபல்லவி

காரணங்கடந்தபரி பூரணமதாய்நிறைந்த
ஆரணமந்தப்பொருளைச் சாறுமடியார்களிடம்
கோரரூபமாகவந்து சீறும்புலிபோல்நின்று
வீரியமாய்வார்த்தைசொன்ன சூரியன்மகனேபோடா.

சரணங்கள்

அண்டபுவனங்களெல்லாம் கண்டிடும்போர்களொடுங்க
வண்டனைப்போல்வார்த்தைபேசி சண்டாநீவந்தாய்
உன்னைகண்டஞ்சவனோபோடா நீதண்டுமுண்டுமாய்பே
பண்டுமுப்புரமெரித்தாற் தொண்டனென்றறியாமலே.

சாமிசொல்-விருத்தம்

பாலனேபயப்படாதே பகர்ந்தநல்வயதிரெட்டும்
ஞாலத்தோரறியத்தந்தோம் நாளென்றும்பதினாருக
காலனுக்கஞ்சவேண்டாங் காகுத்தனயன்கொண்டாட
சீலமாங்கைலைதந்தோம் திருப்பதம்பூசிப்பாயே.